1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) நிதிக்கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் (“தொகுதி”) என்பவற்றினைக் கொண்ட 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் தொகுதியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் அபிப்பிராயம் வெளிப்டுத்துவதற்புகு தொகுதிக்குள் முழு அல்லது வியாபார நடவடிக்கையின் நிதிதட தகவல்கள் தொடர்பில் போதிய கணக்காய்வு சான்றுகளை பெறுதல். ஏன்னுடைய அபிப்பிராயத்திற்காக தீர்விற்கு பொறுடறீப்பை கொண்டுள்ளேன்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி மற்றும் தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி மற்றும் தொகுதி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி மற்றுமு் தொகுதியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி மற்றும் தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 வரையறுத்த ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனி

1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமத்திற்கான குறிப்புரைகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 02- பொருளிருக்குகளின் 11 ஆம் பந்தியின் பிரகாரம், பொருளிருப்புகளின் கொள்வனவு கிரயம் கொள்வனவு விலை, இறக்குமதி வரி மற்றும் ஏனைய வரிகள், போக்குவரத்துச் செலவினம், கையாளல் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட இறுதிப் பொருட்களின் கொன்வனவின் போது நேரடியாக பங்களிப்பு செய்த ஏனைய கியங்கள், மூலப்பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் கம்பனியால் சேகரிக்கப்பட்ட அலுமினிய றெட்றோ துண்டுகளின் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டவை 3,510,914 கி.கி 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த அஅணடிற்கான நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.	இலங்கை மின்சார சபையின் SCRAP அலுமினியம் CEB இற்கு திரும்பவும் அலுமினிய மூலப்பொருள் றொட்டாக (மீள் சுழற்சி செயற்திட்டத்தின் உற்பத்தி செயற்பாடு) அதேயளவு கையளிக்கும் அடிப்படையில் ஏதாவது மூலப்பொரு கிரயத்தை சாட்டுதல் செய்யாமல் SLE இற்கு கையளித்திருந்தது. சேகரிக்கப்பட்ட அளவு நிதியியலிற்கு இனங்காணப்பட வேண்டும். SCRAP அலுமினியம் பெறுதிக்காக முறையான அடிப்படையில் இனங்காணப்பட்டது.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பில் ரூபா 2,051,756 தொகையான பத்து (10) வகை செலவினம் LKAS 08 இன் (கணக்கீட்டுக் கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் மற்றும் தவறுகள்) 42 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல் செய்யாமல் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் 2024 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 2,051,756 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(இ) இலங்கை கணககீட்டு நியம இல. 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களின் மீதியான பெறுமதி மற்றும் பயன்பாட்டுக் காலம் என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் முன்யை ஆண்டிலிருந்து ஏதாவது வேறுபாடு இருப்பின் மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நிம இல. 8 இற்கமைய கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயனும், 2024 திசெம்பர் 31	எதிர்காலத்தில் சொத்துக்களை மீள மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	இல் உள்ளவாறு 7 வகுதிகள் தொடர்பான ரூபா 56,231,603 ஆன முற்கொண்டு செல்லும் சொத்துக்களின் பெறுமதி மீளாய்வு செய்யப்பட்டு நியமத்தில் வேண்டப்பட்டவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	கம்பனியானது ரூபா 135 மில்லியன் தொகையான கடன் வசதிகளை பெற்றிருந்ததுடன் ரூபா 72 மில்லியன் தொகையான காசு மீதிகள், 2024 ஆம் ஆண்டிற்கான மேற்குறித்த கடன் வசதிகள் சார்பில் ரூபா 62 மில்லியன் தொகையான நிலையான வைப்பக்கள் என்பவற்றில் பிணை வைத்திருந்ததுடன் கம்பனியானது அலுமினிய துகள் மீள்சுழற்சி செயற்திட்டதிற்காக இயந்திரம் மற்றும் உபகரணம் இறக்குமதி செய்வதற்கு மேற்குறித்த கடன் வசதியிலிருந்து ரூபா 84 மில்லியன் பயன்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும் மேற்குறித்த பாதுகாப்பு நிபந்தனைகள் SLFRS 07- நிதிக்கருவிகள் வெளிப்படுத்தல்களின் 14 ஆம் பந்தியின் பிரககாரம் நிதிக்கூற்றுக்களில் விரிவான வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.	இது கணக்காய்வு ஐயவினாவில் செய்யப்பட்ட பதிலுக்கு மேலாக உள்ளது. இதன்படி சம்பத் வங்கி PLC இன் வழங்கல் கடிதத்திற்கு இறக்குமதி கடன் வசதி பின்வரும் பாதுகாப்பு நிபந்தனைகளின் கீழ் உள்ளதுடன் இது அடுத்த தடவை இதன்படி வெளிப்படுத்தப்படும். ‘‘ரூபா 72,126,259.34 இற்காக 206118600516 ஆம் இலக்க நிலையான வைப்பு மீது பெறுகின்ற நிதிகள் மற்றும் ரூபா 62,837,740.66 இற்காக 106114005271 ஆம் இலக்க சேமிப்பு கணக்கு மீதான கடன் ஈட்டு நிதிகள் ‘‘	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(உ)	கம்பனியானது கல்கமுவ காணிக்காக 2017 யூலை 07 இலிருந்து 35 ஆண்டுகளிற்காக குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், சொல்லப்பட்ட குத்தகை தொடர்பில் சொத்து பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகை பொறுப்பு என்பன SLFRS – 16– குத்தகையில் வேண்டப்பட்டவாறு கம்பனியால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஊ)	LKAS 19 – ஊழியர் நன்மைகளின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் நிபுணத்துவ மதிப்பீட்டு முறை சகல பொருண்மை பிந்திய வேலைக்கமர்தல் சலுகை கடமைகளும் அளவீடு பிரயோகிப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ள பொதிலும் அத்தகைய நடைமுறை ஓய்வுபெறல் நலன் கடமைகள் அளவீட்டில் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை.	இதன்படி நிபுணத்துவ மதிப்பீட்டிற்கு பின்பற்றப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

(எ)	LKAS 21 – வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களின் தாக்கத்தின் 23 (அ) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் வெளிநாட்டு நாணய நிபந்தனைகள் இறுதி நாணயமாற்று வீதம் பயன்படுத்தி மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ..டொலர் 751,484 பெறுமதியான வியாபார கடன்கொடுத்தோர் (வரையறுத்த கெயில் அவென்ரியுரா (தனியார்)) மீதி இறுதி நாணயமாற்று வீதம் பயன்படுத்தி மாற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் மேற்குறிப்பிட்டவற்றில் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் ரூபா 9,716,020 ஆல் குறைத்தக் காட்டப்பட்டிருந்ததுடன் வியாபார கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் அதிகரித்தக் காடட்டப்பட்டிருந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட கடன்கொடுத்தோர் மீதி இறுதி நாணயமாற்று வீதம் பயன்படுத்தி மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ரூபா 5,814,214 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் LKAS 8 இற்கமைய பதியப்பட்டிருக்கவில்லை. இதனை தொடர்ந்து நிறுத்திவைத்த இலாபம் அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் LKAS 21 இற்கமைய சிறந்த நடைமுறை பின்பற்றப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஏ)	LKAS 37 – நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களின் 86 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது காசு வெளிப்பாய்ச்சலின் சாத்தியம் குறைவாக இருப்பின், நிகழத்தக்க பொறுப்புக்களின் தன்மையை வெளிப்படுத்தும் நோக்கில் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் நிகழத்தக்க பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுதிக்காகவும் நிறுவனம் வெளிப்படுத்தல் செய்யப்பட வேண்டும் மற்றும் நடைமுறையில் அதன் நிதித்ததாக்க மதப்பீடு பந்தி இல் 36-52 இன் கீழ் தொகைகள் தொடர்பான முக்கியமற்ற குறியீடுகள் அல்லது ஏதாவது மீளளிப்பின் சாத்தியம் அளவிடப்பட்டது. எவ்வாறாயினும்	கம்பனியின் முன்னாள் ஊழியரால் தொடப்பட்ட சட்ட நடவடிக்கை (வழக்கு இல. 42/KE/08/2022 - D M C திசநாக்க) தொடர்புபட்டது. தற்போது தொழில் மன்றத்தில் - கேகாலை தெடருகின்றது. எதிர்காலத்தில் நிகழத்தக்க பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

கம்பனியானது கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட சட்ட வழக்குகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை. .

1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைப்பட்டியல் மீதி (அலுமினிய துகள் அல்லாதவை) ரூபா 55,376,984 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக இருப்பு மெய்மையாய்வு பிரகாரம் மொத்த விலைப்பட்டியல் மீதி ரூபா 54,190,884 ஆக இருந்தது. இதன்படி மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,186,100 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும் கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வித்தியாசத்தை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொருளிருப்பு மீதிகளின் இணக்கம் மற்றும் 2024.12.31. இல் நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு (கணக்காய்வு பௌதீக திகதி) இதன்படி, முன்னைய கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது. இரண்டு அறிக்கைகளிற்கும் இடையில் எநத அளவிலும் வித்தியாசம் இருக்கவில்லை. ஆனால் உண்மையான நேர பொருளிருப்பு மதிப்பாய்வு மாற்றப்பட்டிருந்தது. ERP முறைமை நியைிட்ட சாராசரி முறையால் (WAC) பின்பற்றப்பட்டது	இறுதி விலைப் பட்டியலை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வெண்டிய வருமான வரி ரூபா 30.77 மில்லியனாக இருந்ததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரி அறிக்கை பிரகாரம் (2020/2021 வரிமதிப்பீட்டு ஆண்டு வரை) அக்காலப்பகுதி தொடர்பில செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 15.2 மில்லியனாக இருந்தது. இதன்படி, ரூபா 15.57 மில்லியன் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்படதுடன் மீளாய்வாண்டு இறுதிவரையும் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. (இ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 88,715,153 ஆக இருந்ததுடன் 2022/2023 மற்றும் 2023/2024 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்களிற்கான ஏற்பாடு முறையே ரூபா 3,457,708 மற்றும் ரூபா 44,830,141 ஆக இருந்தன. எவ்வாறாயினும்,	நிரப்படுகின்ற வருடாந்த அறிக்கை மற்றும் கொடுப்பனவு நிலை பிவருமாறு உள்ளன. • 2015/2016-2017/2018 செலுத்தப்பட்டது. • 2019/2020-2023/2024 செலுத்தப்படாதது CIT அறிக்கை நிரப்புதல் பூர்த்தியாக்குவதற்கு முன்னர் வருடாந்த நிதிக் கூற்று குறித்த காலப்பகுதிக்கு பிரயோகிக்ககூடிய வரி வீதத்தை பிரயோகிப்பதன் மூலம் வருமான வரி ஏறபாடுகளின் அடிப்படையில் இறுதியாக்கப்பட்டன. இதன்படி திரண்ட CIT வருடாந்த அறிக்கை பெறுமதியுடன் நிதி ஒப்பிடப்பட்டபடி மீதியை வித்தியாசம் காணப்பட்டது. இந்த வித்தியாவம் அடுத்த ஆண்டில் சீராக்கப்படும். சாத்தியமானளவு விரைவில் தீர்ப்பனவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய வருமான வரியை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சொல்லப்பட்ட வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக வரி விதிக்கக்கூடிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது ரூபா 100,596,911 மற்றும் ரூபா 20,584,015 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் முறையே சொத்துக்கள் மீதான மூலதன படிகளை கணிப்பீடு செய்கையில் கருத்திற் கொள்ளப்பட்டதுடன் 30 சதவீதத்திற்கு பதிலாக 24 சதவீதம் பிரயோகித்தது. மேலும், கணக்காய்வு முலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் முறையே 2022/2023 மற்றும் 2023/2024 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான செலுத்த வெண்டிய வருமான வரி முறையே ரூபா 2,652,495 மற்றும் ரூபா 59,278,174 ஆக இருந்தது, இதன்படி சொல்லப்பட்ட வரிமதிப்பீட்டு ஆண்டிற்காக ரூபா 13,642,820 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 13,642,820 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது		
(ஈ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 8,788,579 ஆக இருந்தது. எவ்வாறாயினும் கணப்பீட்டு தாளின் பிரகாரம் 2024/2025 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக இது ரூபா 12,874,877 ஆக இருந்தது. இதன்படி வித்தியாசம் ரூபா 4,086,298 அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் 2024 ஆம் ஆண்டில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	CIT அறிக்கை நிரப்புதல் பூர்த்தியாக்குவதற்கு முன்னர் வருடாந்த நிதிக் கூற்று குறித்த காலப்பகுதிக்கு பிரயோகிக்ககூடிய வரி வீதத்தை பிரயோகிப்பதன் மூலம் வருமான வரி ஏறபாடுகளின் அடிப்படையில் இறுதியாக்கப்பட்டன. இதன்படி திரண்ட CIT வருடாந்த அறிக்கை பெறுமதியுடன் நிதி ஒப்பிடப்பட்டபடி மீதியை வித்தியாசம் காணப்பட்டது. இந்த வித்தியாவம் அடுத்த ஆண்டில் சீராக்கப்படும்.	செலுத்த வேண்டிய வருமான வரியை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.1.4 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத ஆவணச் சான்றுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வரையறுத்த கும்பல்கமுவ மினி கைற்றோ (தனியார்) கம்பனியான துணைநிலை கம்பனில் முதலீடு (2017 இற்கு முன்னர்) தொடர்பில் தள்ளுபடிக்கான ஏற்பாடு ரூபா 10,719,147 ஆக இருந்தது. எவ்வாறாயினும் தள்ளுபடிக்கான ஏற்பாடுகள் தொடர்பில் நாட்குறிப்பு பதிவு, மதிப்பீட்டு அறிக்கை	இந்த ரூபா 10,719,147.00 தள்ளுபடிக்கான ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாண்டின் போது வெளிவாரி கணக்காய்வாளரால் விதந்துரைக்கப்பட்டவாறு (என்ர் அன்ட ஜங்) நாட்குறிப்பு பதிவின் ஊடாக பெறப்பட்டதுடன் வருடாந்த	ஒவ்வொரு நாட்குறிப்பு பதிவுகளிற்கும் போதிய ஆவணச் சான்றுகள் பேணப்பட வேண்டும்.

மற்றும் ஏனைய தொடபுடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.	கணக்காய்விற்காக பெறப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளின் பட்டியலை விட ஏனையவற்றினை இனங்காண முடியாதிருந்தது.	

1.5.1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெறவேண்டியவை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரையும் செலுதத வெண்டிய வருமான வரிக்கு எதிராக ஒன்பது ஆண்டுகளிற்கு மேல் ரூபா 10,152,100 தொகையான பெறேண்டிய WHT மீதியை கோரியிருக்கவில்லை. ஆகவே, WHT மீதியின் அறவீட்டுத் தன்மை முக்கியமற்றுள்ளது.	வேண்டப்பட்ட வங்கியிடமிருந்தான WHT சான்றிதழ் மற்றும் இதனை முனனரே பெறுவதற்கு திட்டமிடல்.	சாத்திமானளவு அதிகமான கோரக்கூடிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) செலுத்த வேண்டியவை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத வைப்பு மீதிகள் ரூபா 2,425,643 ஆக இருந்ததுடன் இது 2019 ஆம் ஆண்டிலிருந்து திரண்டிருந்தது. கம்பனியானது சொல்லப்பட்ட மீதிகளின் வைப்பு மூலங்களை இனங்கண்டிருந்த போதிலும் உரிய பேரேட்டுக் கணக்கிற்கு அவற்றினை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்விற்கு சமரப்பிக்கபடி இனங்காணப்படாத வைப்பு மீதிகளில் அதிகமானவை தீர்வு காணப்பட்டதுடன் இதன்படி 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதுடன் இந்த ஒற்றை பதவு மாத்திரம் நிலுவையில் உள்ளது. இது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இனங்காணப்படாத வைப்புக்களை கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிளதுடன் உரிய கணக்கில் சீராக்கல் செய்யபபட வேண்டும்.
(ii)	ஆறு செலவின வகுதிகள் தொடர்பான ரூபா 490,144 ஆன அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்படடதுடன் அட்டுறு செலவினம் அதே தொகையால் குறைத்துக் காட்டக்கட்டிருந்த.	அந்தச் செலவினம் 2024 ஆம் ஆண்டில் வருடாந்த நிதியறிக்கை இறுதியாக்கிய பீன்னர் செயற்திட்ட நிதிகள் மீளளிப்பிற்கமைய இனங்காணப்பட்டதுடன் அந்த விடுபட்ட பதிவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	அட்டுறு செலவினம் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.2 திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயரித்தல்

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் விதிக்கூற்றுக்கள் மீதான முளைப்பழியுள்ள அபிப்பிராயம் பின்வரும் என்னுடைய அவதானிப்புகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டது.

1.5.2.1 வரையறுத்த சிறீ லங்கா எனேர்ஜீஸ் எச்ஆர் (தனியார்) கம்பனி

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	LKAS 08- கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் எனபவற்றின் பந்தி 42(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் கம்பியானது தவறாக ஏற்பட்டிருந்த அவர்களால் கண்டுபிடிக்கப்பபட்ட பினரான விடயங்களிற்காக அனுமதிக்க்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதலாவது தொகுதியில் மீள குறிப்பிடுகின்ற முன்னை தவறுகளை பின்னோக்கி சீராக்கப்பட வேண்டும் (அ) தவறாக ஏற்பட்டிருந்த முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட்டதற்காக ஒப்பீட்டு தொகையை மீள குறிப்பிடுகின்ற, அல்லது (ஆ) முன்னரே முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட முன்னர் தவறு ஏற்பட்டிருப்பின் முன்னரே முன்னைய காலம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பவற்றின் ஆரம்ப மீதி, மீளக் குறிபிடப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனியானது 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து திசெம்பர் வரைஎ டுக்கப்பட்டிருக்காத காலப் பகுதிக்கான ஆலோசனை சேவைகளிற்காக ரூபா 749,275 தொகை அட்டுறு செலவாக இருந்தது. பின்னர் நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் முன்னைய ஆண்டுச் சீராக்கல் செய்யாமல் 2024 ஆண்டிற்கான ஏனைய வருமானமாக பதியப்பட்டிருந்தது. இதன் விளைவால் அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	ஒப்பந்த ஊழியரின் மாதாந்த சம்பளம் குறித்த காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட ஊழியர் சம்பளம் அட்டுறு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. இதன்படி 2024 ஆம் ஆண்டில் அத்தகைய அங்கீகாரத்திற்கான தவறுகள் எதுவும் இருக்கவில்லை. வேவையின் ஏற்பாடின்மைக்காக உறுதிப்படுத்தல் அடிப்படையில் திரும்ப செய்யப்பட்டிருந்தது.	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஆ)	நீக்கூற்றுக்களின் பிரகாரம் சம்பளக் கணக்கின் கிரயங்களில் வெளி ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட சம்பளங்களில் செலுத்த வேண்டிய ரூபா 875,835 தொகையான APIT கணக்கேடுகளில் அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம்	இது இதன்படி சீராக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய APIT அனுமதிக்கப்பட வேண்டும்.

அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய APIT அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.5.2.2 வரையறுத்த கும்பல்கமுவ மினி கைட்ரோ (தனியார்) கம்பனி

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2021 முதல் 2023 வரையான முன்னைய காலப்பகுதிக்கான உடன்படிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபையால் (CEB) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 40,336,568 தொகையான கொள்வனவு செய்யப்பட்ட மின்வலுவிற்கான தாமதப்பட்ட கொடுப்பனவுகள் மீதான வட்டி வருமானம் LKAS -8 (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மீதான மாற்றங்கள் மற்றும் தவறுகள்) 42 ஆம் பந்தியின் ஏற்பாடுகளிற்கமைய நிதிக் கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யாமல் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	உடனடுகின்றோம்	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஆ)	LKAS 16 ஆமனம், பொறி மற்றும் உபகரணங்களின் 37 ஆம் பந்திக்கமைய ஆதனம் மற்றும் பொறியின் வகுப்பு சொத்துக்களின் அதே தன்மை மற்றும் நிறுவன செயற்பாடுகளில் பயன்பாடு என்பவற்றின் வகைப்படுத்தலாக உள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப் பட்டவாறு ரூபா 599,158,493 தொகையான மின்பொறியின் பெறுமதி பொறின் பெறுமதியுடன் சேர்த்து கட்டிடங்களையும் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்களிற்கான பெறுமதி புறம்பாக பெறுவதற்கும் கட்டிடங்களின் பெறுமதியை தனியாக பெறுவதற்கு முறையான மதிப்பாய்வு மேற்கொள்வதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்,	ஏற்றுக்கொள்கின்றோம். இது மதிப்பாய்வு திணைக்களத்தின் ஊடாக முறையான மதிப்பாய்வு செண்ண வேண்டியதுடன் இதற்காக கவனம் செலுத்தப்படும்.	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயங்களின் பயன்பாட்டு ஆயுள் காலம் கம்பனியால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.		
(இ)	கம்பனியானது 2015 பெப்ரவரி 18 இல் ஒரு பேர்ச் ரூபா 5,000 வீதம் (தற்போதைய வீதம் ரூபா 5,750) வருடாந்த அனுமதிபத்திர கட்டணத்துடன் 20 ஆண்டுகள் குத்தகை காலத்திற்காக மினி கைற்றோ பவர் பொறி சொந்தமாக செய்ற்படுத்துவதற்கு கட்டிடம் கட்டும் நொக்கத்திற்காக காணியொன்றை குத்தகைக்கு விடுவதற்கு வனவள பாதுகாப்பு திணைக்களத்துடன் உடன்படிக்கை கைச்சத்திடப்பட்டிருந்தது. இதன்படி, காணியானது சொத்து பயன்பாட்டு காலம் மற்றும் குத்தகை பொறுப்புக்களை SLFRS – 16-குத்தகையின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது செயற்பாட்டு குத்தகையாக மேற்குறித்த சொத்துப் பயன்பாட்டு உரிமையை இனங்கண்டிருந்தது. இதன்படி, காலப்பகுதிக்கான ரூபா 4,910,847 ஆன குத்தகை தொகை இலாப நட்டக் கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய விரிவான வருமானம் மற்றும் அட்டுறு செலவினங்கள் SLFRS – 16- குத்தகையின் அங்கீகாரம் மற்றும் அளவீட்டுடன் இணங்கி சொத்து பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகை பொறுப்பாக அங்கீகரிப்பதற்கு பதிலாக செலவு வைக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இதன்படி திருத்தப்படும்.	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்..
	மேலும், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 32,829,237 ஆன வருடாந்த அனுமதிப் கட்டணம் 2017 முதல் 2024 வரையான காலப் பகுதிக்காக வனவளப் பாதுகாப்பு திணைக்களதிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி 2024 ஒக்தோபர் 09 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் அனுமதி எதிர்காலத்தில் இரத்து செய்யப்பட வேண்டியுள்ளதென கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும்,	கம்பனியானது முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பதற்கு உடன்பட்ட தொகையை கம்பனியால் திருத்துவதற்கு வனவளத் திணைக்கத்திடமிருந்து வேண்டுகை செய்திருந்தது. இதன்படி இரத்து செய்தல் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை..	--மேறபடி-

	கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்குறிப்பிட்ட விடயங்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை		
(ஈ)	கம்பனியானது வரையறுத்த சிறீ லங்கா எனர்ஜீஸ் (தனியார்) கம்பனியின் (SLE) அலுமினிய துண்டுகள் மீழ்சுழற்சியில் செயற்திட்டத்தின் சார்பில் 2024 நவம்பர் 22 இல் ரூபா 14,957,456 தொகையான வங்கி மேலதிக பற்றினை பெற்றிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் தீர்ப்பனவு செய்திருந்தது. எவ்வாறாயினும் வங்கி மேதிக பற்றும தீதான நிதிச் செலவு கட்டணம் மற்றும் ரூபா 1,212,405 தொகையான LC இற்கான வங்கி உத்தரவாதங்ளில் தரவு என்பன SLE இடமிருந்து பெறவெண்டிய தொகையில் கணக்கீடு செய்வதற்கு பதிலாக நிதிக் கூற்றுக்களில் நிதிச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால் ஆண்டிற்கான இலாபம் மற்றும் SLE இடமிருந்து பெறவேண்டிய தொகை அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இதன்படி திருத்தப்படும்.	பெறவெண்டிய மீதிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்ட வேண்டும்.

1.5.2.3 வரையறுத்த பயோ மெட் கைட்றோபவர் (தனியார்) கம்பனி

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 37 ஆம் பந்திக்கமைய ஆதனம் மற்றும் பொறியின் வகுப்பு சொத்துக்களின் அதே தன்மை மற்றும் நிறுவன செயற்பாடுகளில் பயன்பாடு என்பவற்றின் வகைப்படுத்தலாக உள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 259 மில்லியன் தொகையான மின்பொறியின் பெறுமதி பொறின் பெறுமதியுடன் சேர்த்து காணி மற்றும் கட்டிடங்களையும் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும்	ஏற்றுக்கொள்கின்றோம், மதிப்பாய்வு திணைக்களம் மொத்த பெறுமதியாக ரூபா 259 மில்லியன் வழங்கியிருந்ததுடன் இது மின்பொறி, காணி, கட்டிடம் ஏனைய தொடர்புடைய உபகரணங்கள் மற்றும் ஆரம்க மூலதனத்தின் பெறுமதினை மேவுகின்றது. இதன்படி ரூபா 90 மில்லியன் பெறுமதியான பங்குகள் உரிமை மாற்றத்திற்காக 15 துறைகளிலிருந்து SLE இன் பெயரிற்கு மாற்றப்பட்டது. முதலீடுகளின் மிகுதி நிதி நிலமை கூற்றின் கீழ் உரிய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகையாக பதியப்பட்டுள்ளது. மிகுதி உரிய கம்பனிகளிற்கு தற்போதைய நிதியாண்டில் BOD அனுமதியுடன்	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	கட்டிடங்கள் மற்றும் பொறியிற்கான பெறுமதி புறம்பாக பெறுவதற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும். ஆகவே, மதிப்பீட்டு அறிக்கை இன்மையால் ஒவ்வொரு கூறியதும் சரியான பெறுமதி மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், நியமத்தின் 58 ஆம் பந்தியின் ஏற்பாடுகளிற்கு முரணாக கம்பனியால் காணியின் மீது பெறுமானததேய்வு செய்யப்பட்டிருந்தது.	நியாயமான பெறுமதியுடன் வழங்கப்படும்	
(ஆ)	நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்கு விண்ணப்ப பணம் ரூபா 169 மில்லியனாக இரந்தது. எவ்வாறாயினும் பங்கு விண்ணப்ப பணம் பெறுவதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருக்காததுடன் பங்கு விண்ணப்ப பணம் மீதி தொடர்பில் கணக்காய்விற்கு போதிய ஆவணச்சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.	முழுமையாக மறுக்கின்றோம். இந்த குறித்த கொள்வவு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் பூர்த்தியாக்கப்பட்டது. ரூபா 259 மில்லியன் பெறுமதி கொள்வனவை கருத்திற் கொண்டமையால் அனுமதிக்கப்பட்டதுடன் இதன்படி கொள்வனவு ரூபா 259 மில்லியன் செலுத்தப்பட்டது. மொத்த கொள்வனவை கருத்திற் கொள்கையில் ரூபா 90 மில்லியன் வரையறுத் சிறீ லங்கா எனேர்ஜீஸ் (தனியார்) கம்பனியின் பெயரிற்கு பங்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மிகுதி இன்னமும் பங்கு விண்ணப்ப பணமாக பதியப்பட்டள்ளது. பங்குகள் வழங்கப்பட்டுள்ளது.	போதிய மற்றும் முறையான ஆவணச் சான்றுகள் உ.த: வபை விஞ்ஞாபனம் மற்றும் தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.5.2.4 வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனி

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	LKAS 8- கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் எனபவற்றின் பந்தி 42(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் கம்பியானது தவறாக ஏற்பட்டிருந்த அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பினரான விடயங்களிற்காக அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் முதலாவது தொகுதியில் மீள குறிப்பிடுகின்ற முன்னை தவறுகளை பின்னோக்கி சீராக்கப்பட வேண்டும் (அ) தவறாக ஏற்பட்டிருந்த முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட்டதற்காக ஒப்பீட்டு தொகையை மீள குறிப்பிடுகின்ற, அல்லது (ஆ) முன்னரே முன்னைய காலம் சமர்ப்பிக்கப்பட முன்னர் தவறு ஏற்பட்டிருப்பின் முன்னரே முன்னைய காலம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பவற்றின்	உடன்படுகின்றோம்	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	ஆரம்ப மீதி, மீளக் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும், 2021 முதல் 2023 வரையான முன்னைய காலப்பகுதிக்கான வரி மதிப்பீட்டின் 5.2(ஆ) ஆம் பந்திக்க்கமைய ரூபா 37,573,582 தொகையான CEB இடமிருந்து கொடுப்பனவுகள் தாமதம் மீதான வட்டி LKAS 8 - கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள் எனபவற்றின் பந்தி 42 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் முன்னைய ஆண்டுச் சீராக்கல் செய்யாமல் மீளாய்வாண்டில் பதியப்பட்டிருந்தது. இதன் விளைவால் அதே தொகையால் ஆண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(ஆ)	LKAS - 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் தேறிய பெறுமதி மற்றும் பயன்பாட்டுக் காலம் வருடாந்தம் மீளாய்வு செயய்பட வேண்டியதுடன் முன்னைய மதிப்பீடுகள் வேறுபடுமாயின் LKAS . 8 இற்கமைய மாற்றங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 9 வகுதிகள் தொடர்பான ரூபா 273,786,978 முற்கொண்டுவரும் பெறுமதி நியமங்களில் வேண்டப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ள்பட்டது.	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(இ)	2021/2022 வரி மதிப்பீட்டு ஆணடிற்கான வருமான வரி அறிக்கை மேலாக இறுதியாக்கப்பட்டிருந்த போதிலும் 2021/2022 ஆண்டிற்கான ரூபா 2,731,300 ஆன வருமான வரி ஏற்பாடுகள்நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் ஆண்டின் இறுதியில் இலாபம் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதே தொகையால் செலுத்த வேண்டிய வருமான வரி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்ள்பட்டது.	கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலின் 3.2 ஆம் பிரிவு	மேற்குறித்த கைநூலின் வேண்டுகையுடன் இணங்கி கம்பனயானது அவர்களுடைய ஆட்சேர்ப்புத் திட்டங்களை (SOR) தயாரித்திருக்கவில்லை.	செயற்பாட்டுக் கைநூல் தற்பொது கிடைத்திருக்கவில்லை முன்னரே தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைளின் 2.2.5 (அ) ஆம் பிரிவு	பங்கிலாபங்கள், பங்குதாரர் உரிமை மூலதன மாற்றங்கள் மற்றும் பிரதான கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கிய விடயங்களை வெளிப்படுத்த சபை அனுமதித்த துணைநிலைக் கொள்கை வைத்திருப்பது கட்டாயமாகும். எவ்வாறாயினும் கம்பனியானது அத்தகைய கொள்கையை தாபித்திருக்கவில்லை.	கூட்டு ஆளுகை வழிகாட்டல் பட்டியல் தற்பொது கிடைத்திருக்கவில்லை முன்னரே தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை வழிகாட்டலுடன் இணங்கியொழுக வேண்டும்.
(இ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை வழகாட்டலின் 2.4 ஆம் பிரிவு	பணிப்பாளர் சபை கூட்டு ஆளுகை வழிகாட்டலின் இணைப்பு II இல் வழங்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி சபை செயலாளருக்கு வருடாந்தம் அவர்களுடைய உறவை தனிப்பட்ட ரீதியில் வெளிபடுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது 2024 ஆம் ஆண்டிற்காக பணிப்பாளர் சபையின் வெளிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.	கம்பனி எதிர்காலத்தில் இதனைப் பின்பற்றும்.	உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை வழிகாட்டலுடன் இணங்கியொழுக வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை வழகாட்டலின் 4.2 ஆம் பிரிவு	கணக்காய்வு குழு (AC) மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வெண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் பொது இரண்டு கணக்காய்வு குழு மாத்திரமே நடைபெற்றது.	கணக்காய்வு குழுவின் உறுப்பினர்கள் வருகை தராமையால் காலாண்டு கூட்டங்களை திட்டமிட்டவாறு நடாத்த முடியவில்லை.	உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை வழிகாட்டலுடன் இணங்கியொழுக வேண்டும்.

1.7 வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) 2017 ன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் (i) 90(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியானது அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளில் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது காலாண்டு வருமான வரி தவணைகள் செலுத்தியிருக்கவில்லை. (ii) 126 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியானது அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளில் வேண்டப்பட்டவாறு 2017/2018 மற்றும் 2022/2023 வரி மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான வரி அறிக்கைகளை கோவையிட்டிருக்கவில்லை.	2022/2023 மற்றும் 2023/2024 வரி மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான வருமான வரி கோவை தற்போது செயற்பாட்டில் உள்ளன. கணிப்பீடுகள் பூர்தியாக்கப்பட்டு கணக்காய்வு மீளாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிலுவை வரிகள் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படும்.	உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் ஏற்பாடுகளுடன் இண்கியொழுக வேண்டும்.

2 நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள

மீளாய்வாண்டின் தொகுதியின் செயற்பாட்டு விளைவு ரூபா 149.68 மில்லியன் (வரிக்கு முன்னரான) இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 230.2 மில்லியன் ஆகும். ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 80.52 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வருமானங்களில் வீழ்ச்சி மற்றும் நேரடிச் செயற்தட்டச் செலவினங்களில் அதிகரிப்பு என்பன இந்த வீழ்ச்சிக்கான காரணமாக உள்ளது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதங்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன

வருமானம் / செலவினம்	2024 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்	அதிகரிப்பு / (வீழ்ச்சி) ரூபா மில்லியன்	சதவீதம் (%)
வருமானங்கள்	783.4	1116.86	(333.5)	(29.86)
விற்பனைக் கிரயம்	597.85	683.24	(85.39)	(12.50)
நேரடி செயற்திட்ட செலவினம்	4.9	1.25	3.65	292.00
நிதிச் செலவினம்	38.18	108.05	(69.87)	(64.66)
நிதி வருமானம்	28.55	9.83	18.72	190.43

2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்கான தொகுதியின் பிரதான வீதங்கள் பின்வருமா் உள்ளன.

(அ) ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 28.3 சதவீதத்திலிருந்து 15.24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) மொத்த இலாப விதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 38.82 சதவீதத்திலிருந்து 23.69 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) தேறிய இலாப விதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 16.38 சதவீதத்திலிருந்து 13.85 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஈ) நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.75 தடவைகளிலிருந்து 0.60 தடவைகளிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

(உ) நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.65 தடவைகளிலிருந்து 0.47 தடவைகளிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ)	கம்பனியானது இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி எனபவற்றிகு மீற்றர் உறைகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும் இரண்டு தரப்பினருக்கும் இடையில் வியாபார உடன்படிக்கைகளோ அல்லது MOU கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கை தயாரிக்கப்பட்டதுடன் SLE பணிப்பாளர் சபை அனுமதிக்கப்பட்டு மேலும் செயறபடுத்தவதற்கு CEB இற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் கம்பனிக்கும் உரிய தரப்பினர்களிற்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும்.
(ஆ)	கம்பனியானது CEB இடமிருந்து பெறப்பட்ட அலுமினிய துண்டுகள் மீழ்சுழற்சியில் மற்றும் CEB இற்கு அலுமினிய றெட்றோ கம்பிகள் விற்கும் வியாபாரத்தில் ஈடுபடுபட்டிருந்தது. சொல்லப்பட்ட இரண்டு தரப்பினருக்கும் இடையில் கைச்சாத்திட்ட திரும்ப வாங்குதல் உடன்படிக்கை அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) உடன்படிக்கை கணக்காய்வு திகதிய வரையும் இருக்கவில்லை.	உடன்படிக்கை தயாரிக்கப்பட்டதுடன் SLE பணிப்பாளர் சபை அனுமதிக்கப்பட்டு மேலும் செயறபடுத்தவதற்கு CEB இற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் கம்பனிக்கும் உரிய தரப்பினர்களிற்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும்.
(இ)	2024 சனவரி 02 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அனுமதித்த தீர்மானத்தின் பிரகாரம் இயந்திர உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்காக காணியை	ஏற்றுக்கொள்ளப்பட்டது. காணி விடுவித்தல் உடன்படிக்கை 2025 யீலை 17 இல் இரண்டு பணிப்பளார்களால் கைச்சாத்திடப்பட்டது. பின்னர்	உரிய அதிகாரிகளிடமிருந்து செயற்திட்ட வேலைத்தளத்தின் காணிக்கான சட்ட

	பிணையான ஈடுவைத்து LC வசதிகளின் கீழ் ஐ.அ.டொலர் 315,199.20 பெறுமதிக்காக (அண்ணளவாக ரூபா 94 மில்லியன்) கடன் கடிதம் (LC) திறப்பதற்கு SLE ஆல் திர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் செயற்பாடுகளிற்கு தேவையான வேண்டப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்கள் 2024 ஆம் ஆண்டு இறுதியில் உரிய அதிகாரிகளிடமிருந்து செயற்திட்ட வேலைத்தள காணியின் சட்ட தெளிவுபடுத்தல் பெறப்பட்டிருக்காமையால் இறக்குமதி செய்ய முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.	மேலும் செயற்படுத்தவதற்கு தலைவருடைய அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் தற்பொது இதன்படி காணி தௌளவாக்கல் பூர்த்தியாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.	ரீதியான தெளிவாக்கல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மின்சார சபையிற்கு (CEB) செலுத்த வேண்டிய தொகை ரூபா 25,848,726 ஆக இருந்த போதிலும் கம்பனியினுடைய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 28,290,000 ஐ குறிக்கின்றது. இதன்படி ரூபா 2,441,274 ஆன விதியாசம் அவதானக்கபபட்டது.	பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் தொடர்பில் விரிவான பொழிப்புகள் CEB இந்கு ஏற்கனவே பகிரப்பட்டதுடன் இணக்ககூற்று பூர்த்தியாக்கப்படும்	உரிய தரப்பினர்களிற்கு இடையில் வித்தியாசங்களை இணஙக்கம் செய்வதற்கும் நிலுவைகளை விரைவில் தெளிவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	கம்பனியினுடைய பொது முகாமையாளர் சம்பளம் தொடர்பில் ரூபா 21,966,396 ஆன தொகை CEB ஆல் செலுத்தப்பட்டிருந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் நிலுவையாக இருக்கின்றது.	பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் தொடர்பில் விரிவான பொழிப்புகள் CEB இந்கு ஏற்கனவே பகிரப்பட்டதுடன் இணக்கக்கூற்று பூர்த்தியாக்கப்படும். மேலும் செலுத்த வேண்டிய மீதிகளில் GM SLE இன் சம்பளம் ரூபா 8,339,763.67 கடந்த ஆறு மாதங்ளாக உள்ளது. .	மேலதிகங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பதிவேடுகளின் பிரகாரம் (2025 மார்ச் 18) 2015 இன் மூன்றாவது காலாண்டிற்காக செலுத்த வேண்டிய VAT ரூபா 1,596,821 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது 2025 யூன் 26 ஆன கணக்காய்வு திகதி வரை சொல்லப்பட்ட தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது முன்னையவற்றுடன் தொடர்பு பட்டிருக்கவில்லை. IRD உடன் பின்பற்றப்படும்.	நிலுவை செலுத்த வேண்டிய VAT ஐ தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(எ)	கம்பனயின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய NBT மீதி ரூபா 1,089,334 தீர்ப்பனவு செய்யப்படாமல் 06 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.	நிலுவைாக இருக்கின்ற VAT தீர்ப்பனவு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் NBT இன் இந்த நிலுவை மீதி இதன்படி தீர்ப்பனவு செய்யப்படும்.	நிலுவையாக இருக்கின்ற மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	2024 திசெம்பர் 31 இல் உளளவாறு செலுத்த வேண்டிய SSCL (தேறிய) ரூபா 8,951,263 ஆக இருந்தது. மேலும் இது 2020 இலிருந்து ரூபா 494,298 பெறவேண்டிய NBT மீதியின் உள்ளடக்கியது.	ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பெறவேண்டிய NBT மீதி CEB இடமிருந்து பெறவேண்டியிருந்ததில் புறம்பாக இனங்காணப்பட்டுள்ளது. விபரங்கள் கணக்காய்விற்கு பகிரப்பட்டது.	நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஐ)	நிதிக்கூற்றுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர்பில் ரூபா 97,503,731 தொகை தீர்ப்பனவு செய்யப்படாமல் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.	1.2.1.2 (o) இல் அதே கணக்காய்வு ஐயவினாவிற்கு செயய்யப்பட்ட பதிலிற்கு தொடர்புபட்டது	நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வெலைகளில் தாமதஙடகளட

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சீதாவகங்கா நீர் மின்சார செயற்திட்டம் CEB ஆல் நீர் மின்சார வளமாக அனுமதித்திருந்ததுடன் அவை 2015 முதல் 2021 வரை இந்த செயற்திட்டதுடன் ஈடுபட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ரூபா 301 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. நிதிப் பிரச்சனைகள் மற்றும் அரசாங்க கொள்கையில் மாற்றங்கள் காரணமாக CEB இற்கு 2021 இல் வரையறுத்த சிறீலங்கா எனேர்ஜிஸ் (தனியார்) கம்பனியிற்கு செயற்திட்டத்த மாற்றியிருந்தது. இதன்படி கம்பனியானது இந்த செயற்திட்டம் தொடர்பான சாத்திய வள அறிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் ரூகா 3,500 மில்லியன் கிரயத்தில் ஒவ்வொன்றும் 7 இலட 2 நீர் மின்சார பொறியை கட்டுவதற்கு திட்டமிட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் 2021 இல் கம்பனியால் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 01 இல் அத்திவாரக் கல் இடப்பட்டது. CEB ஆல் செய்யப்பட்ட மேலதிக செலவினம் கம்பனியானது 2024 திசெம்பர் 31 அளவில் அந்த செயற்திட்டத்தில் ரூபா 18,830,072 செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நிர்மாணம் தேசிய மின் நிலையத்திற்கு	அனுமதி நடைமுறைக்கான தற்போதைய நிலை பின்வருமாறு உள்ளது. CEA இடமிருந்தான அனுமதி பெறப்பட்டது. SPPA ஆனது CEB உடன் செயற்படுத்தப்பட முடியும் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்தான அனுமதியை தவிர சகல மனுமதிகளும் பெறப்பட்டிருந்ததுடன் அதிகாரசபைக்கு வரைவு IEE அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றிற்கு கருத்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.	செயற்திட்டத்தை விரைவுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை உருவாக்காமல் இன்னமும் ஆரம்ப கட்டத்தில் இருந்தது.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2006 காள்வனவு வழிகாட்டல் மற்றும் கைநூல் ஒரு மெற்றிக் தொன்னிற்கு ஐ.அ.டொலர் 3860 வீதத்தில் 360 மெ.தொன் பொலிக்குரோனேற் கொள்வனவு செய்வதற்கு வரையறுத்த கைலெஸ் அவென்ருற (தனியார்) கம்பனிக்கு 2023 நவம்பர் 24 இல் கமபனியால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
(i) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1. (அ), (ஆ) மற்றும் (இ) ஆம் பந்தியின் பிரகாரம் PE ஆனது MPP ஐ தயாரிக்கின்றது. குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக திட்டமிடப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் MPP இல் பட்டியலிடப்பட வேண்டியதுடன் ஆண்டின் உடனடியான கொள்வனவு நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது கணக்காய்வு திகதி வரையும் பிரதான கொள்வனவு திட்டம் (MPP) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. (ii) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு கால அட்டவணை (PTS) கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது கணக்காய்வு திகதி வரையும் PTS தயாரித்திருக்கவில்லை.	i , ii. கம்பனியின் பிரதான திட்டம் மீற்றர் உறை உற்பத்தி திட்டத்திற்காக பின்வரும் விடயங்கள் கொள்வனவு தொடர்பாக உள்ளது. 1. பொலிக்குரோனேற 2. மீற்றர் பெட்டி 3. நெளிந்த அட்டை பெட்டிள் 4. இறப்பர் பட்டி 5. ரொறிஸ்சன் ஸ்பிறங் தற்போதைய சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட பொருட் வேண்டுகைகள் போட்டி கேள்வி நடைமுறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு விடயங்களிற்குமாக பொதுவான கேள்வி உற்பத்தீ திட்டத்தின் அடிப்படையில் வருடாந்த தேவைழய திருப்தி செய்வதாக உள்ளது. இதன்படி பொருட்கள் ஆகக்குறைந்த கட்டளை மட்டத்ததை அடந்ததுடன் திட்ட முனாமையாளர் வேண்டுகையில் கேள்வி வெளியிடப்பட்டுள்ளது. இவற்றினை விட மேற்குறிப்பிட்ட நடைமுறை ஏதாவது கட்டமைக்கப்பட்ட MPP மற்றும் PTS கம்பனியில்	வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

	கிடைத்திருக்காததுடன் முன்னரே தயாரிப்பதற்கு பின்பற்றப்படும்.	
(iii) கொள்வனவு வழிகாட்டலின் 4.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல இணைந்த கிரயங்கள் உள்ளடங்கலாக மொத்த கிரய மதிப்பீடு (TEC) PE ஆல் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மொத்த கிரய மதிப்பீடு கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மொத்த கிரய மதிப்பீடு ஒவ்வொரு கொள்வனவிற்கும் தயாரிக்கப்பட வேண்டும். கோள்வியாளர்களின் TEC அறிக்கை தொடர்புபடுத்தப்பட்டது.	வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.
(iv) கொள்வனவு கைநூலின் 2.12 ஆம் பந்தியின் பிரகாரம் PCs மற்றும் TECs களின் சகல உறுப்பினர்களும் முதலாவது கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் வெளிப்படுத்தல் கையொப்பமிடுவதற்கு வேண்டப்பட்டது. எவ்வாறாயினும் வெளிப்படுத்தல் படிவம் PCs மற்றும் TECs களின் உறுபிபினர்களால் கையொப்பமிடப்படவில்லை	இந்த சிறந்த நடைமுறையாக பின்பற்றப்படும்.	வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சகல நிறுவனங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி" நிரல் பிரகாரம், அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்ய வேண்டும். ஆனால், அடைய வேண்டிய உரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அந்த நோக்கங்கள் அடைவதிலுள்ள இடைவெளி அதேபோல முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் என்பன இனங்காணப் பட்டிருக்கவில்லை.	இந்த சிறந்த நடைமுறையாக பின்பற்றப்படும்.	கம்பனியானது நிலை பேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான ஐக்கிய நாடுகளிள் "2030" நிகழ்ச்சி நிரலுடன் இணங்கியொழுக வேண்டும்.